## சபரகமுவ மாகாண வருமானத் திணைக்களத்தின் கள/அலுவலக பிரிவு 02 சேவை வகை (வரி அதிகாரி) தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

சபரகமுவ மாகாண வருமானத் திணைக்களத்தின் கள/அலுவலக பிரிவு 02 சேவை வகை (வரி அதிகாரி) தரம் II இற்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **2021 மார்ச் மாதம்** அளவில் பரீட்சை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**01. நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை :- 04**

**02. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி :- 2021.01.15**

**03. இணைத்துக் கொள்வதற்கான தகமைகள் :-**

3.1 **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் பட்டம்.**

**அல்லது**

**ஒரு சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.**

3.2 **பொது தகமைகள்**

(அ). **2021.01.15** திகதிக்கு விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன், விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில், விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல்.

விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ). சிறந்த நடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ). ஏதேனும் மதகுருமார் இப் பரீட்சைக்கு தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(ஈ). விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு **21 வயதிற்கு** குறையாத **35** வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (பிறந்த திகதி **1986.01.15** இருந்து **2000.01.15** வரை)

(உ). திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் இரு தடவைகள் மாத்திரமே தோற்ற முடியும்.

**04. இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் :-**

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 மற்றும் 2016.02.25 திகதியுடைய கள/அலுவலக பிரிவு 02 சேவை வகை (வரி அதிகாரி) தரம் II இற்கான சம்பள வகுதி MN 5 – 2016 அமைய ரூ. 34,605 – 10x660– 11x755 – 15x930 – 5x750 ரூ.63,460/- ஆக மாத சம்பளம் உரித்துடையதாகும். மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கு அவ்வப்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளும் உரித்துடையதாகும்.

**05. இப்பதவி நிரந்தரமானதும் , ஓய்வூதியமுடையது.**

**06. இணைத்துக் கொள்ளும் முறை :-**

வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் எழுத்து மூலமான போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/90 விதிமுறைகளின் படி தகமைகளின் ஒழுங்கு முறைகளுக்கு எற்ப ஆட்சேர்த்தல் நடைபெறும். சித்தியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளின் அளவு 40% ஆகும்.

07. பரீட்சையின் பாடத்திட்டம் :-

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாட விதானம் | நேரம் | முழுப் புள்ளி | தேர்ச்சி புள்ளி |
|---|---|---|---|---|
| 1. கிரகித்தல் | பகுதி – 1<br>கட்டுரை மற்றும் சாராம்சம் எழுதல் உள்ளடங்கும்<br>பகுதி – 11<br>இரண்டாம் பகுதி மொழி தொடர்பான அறிவினைச் சோதிக்க பல அமைப்புக்களைக் கொண்டுள்ளது.இவ்வமைப்பு வினாக்களில் அடிகோடிடப்பட்ட வசனங்களின் தனிச் சொல்லினை அல்லது விமர்சனக் குறிப்புக்களை எழுத , அல்லது பொருத்தமான தீர்வினை தேர்ந்தெடுத்தல் அல்லது தரப்பட்ட வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து எழுத அறிவுறுத்தப்படும். | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. உளச்சார்புப் பரீட்சை | தர்க்க ரீதியாக சிந்தித்தல் மற்றும் முடிவுகளை எடுத்தல் தொடர்பான அறிவினைப் பரிசோதிக்கும் வகையிலான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது. | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. பொது அறிவு | இலங்கையின் பௌதீக, அரசியல், பொருளாதார சமூக மற்றும் கலாசார சூழல் உள்ளடங்களாக இலங்கையின் சுற்றாடல் தொடர்பான மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறை விவகாரங்கள் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான அறிவினை அளவிடுவதாக அமையும். (பல்தேர்வு வினாக்கள் உள்ளடங்கும்) | 01 மணித்தியாலம் | 100 | 40 |

இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமாக நடாத்தப்படும்.கிடைக்கின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரீட்சை நடாத்துகின்ற நகரம் தீர்மானிக்கப்படும். பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிபடுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.வெற்றிடங்களை நிரப்புவதற்காக போதிய விண்ணப்பங்கள் கிடைக்காது விடின் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சபரகமுவ மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

08. விண்ணப்பிக்கும் முறை :-

8.1 இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A-4 அளவிலான கடதாசிகளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் இல 05 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது கையெழுத்தினாலே நிரப்புதல் வேண்டும்.மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.2 பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும்.இப் பரீட்சைக் கட்டணத்தை சப்ரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவாகுமாறு சப்ரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களுக்கு ( தபால் அலுவலகம் , வங்கி ) பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8.3 சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2021.01.15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் **"செயலாளர் , சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு , மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி , புதிய நகரம் , இரத்தினபுரி "** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண வருமானத் திணைக்களத்தின் கள/அலுவலக பிரிவு 02 சேவை வகை (வரி அதிகாரி) தரம் II ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2021 "** எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் , பதவிக்குரிய தகைமைகளை பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

8.4 விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கேற்ப தகமைகள் உள்ளதா என பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் போதுமான தகமைகள் இல்லை என அறியப்படின் , அவரது அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும். இவ் விண்ணப்ப அறிவித்தலில் அடங்காத ஏனைய விடயங்கள் இருப்பின் அவை தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.இவ் விளம்பரத்தில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.அத்துடன் இவ்வாட்சேர்ப்பு அறிவித்தலின் வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான இறுதித் தீர்மானமும் இவ் ஆணைக்குழுவுக்குரியது.

பீ.எஸ்.ஆர்.எம்.விஜயராஜ,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
சபரகமுவ மாகாணம்
2020.12.09

மாதிரி விண்ணப்பப்படிவம்

# சபரகமுவ மாகாண வருமானத் திணைக்களத்தின் கள/அலுவலக பிரிவு 02 சேவை வகை (வரி அதிகாரி) தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்

சிங்களம் – 2

தமிழ் – 3

(சரியான இலக்கத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்)

பரீட்சைக்கு தோற்ற விரும்பும் நகரம்

இரத்தினபுரி

கேகாலை

1. அ. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில் உ+ம் GUNAWARDHANA M.G.B.S.K.)

.....................................................................................................................................

ஆ. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................

இ. முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..........................................................

ஈ. தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

உ. தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. I. நிரந்தர முகவரி:- ..........................................................................................

II. பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :- ..........................................

.....................................................................................................................................

III. விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :- இரத்தினபுரி ☐ கேகாலை ☐

IV. விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 2021.01.15 ஆம் திகதிக்கு சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவிடக் கால எல்லை

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐ ல் சபரகமுவ மாகாணத்தில் வதிவிடவில்லை எனின், துணைவர் சபரகமுவ மாகாணத்தில் வதிபவரா என்பதைக் குறிப்பிடுக. ..........................................................................................

3. I. பெண்/ஆண் :- ☐

பெண்-1 , ஆண்-0 (சரியான இலக்கத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்)

II. பிறந்த திகதி :-

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

III. விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 2021.01.15 ஆம் திகதிக்கு வயது:-

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

4. கல்வித் தகைமைகள் :-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொண்ட பட்டம் தொடர்பான விபரம்

| பல்கலைக்கழகம் | பெற்றுள்ள பட்டம் | கால எல்லை | தரம் | செல்லுபடியாகும் திகதி (Effective date) |
|---|---|---|---|---|
| | | | | |

(மேலே தகவல்கள் தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பட்டச் சான்றிதழின் அல்லது பட்டம் நிரூபிக்க பல்கலைக்கழகம் வழங்கிய பிரமாணப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

சட்டத்தரணி எனின்,
சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த வருடம் :- ........................................................................................
(உரிய சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)

5. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் :- ..............................................................
பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் :- ..............................................................

> பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.
> ( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் )

**6. விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

........................................ ஆகிய என்னால் இவ் விண்ணப்பத்தில் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையும் உண்மையானதும் , சரியானதும் என உறுதிபடுத்துகின்றேன். என்னால் வழங்கியுள்ள தகவல்கள் பிழையானது என்பதை அறிந்தால் , விண்ணப்பித்துள்ள மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கான எனது உரிமை கவனிக்கப்படமாட்டாது.அத்துடன் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியும் என்பதை நான் நன்கு அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக விதிக்கப்படுகின்ற சட்ட விதிகளுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

திகதி ................................................ ..........................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
**( தேவையற்ற வசனங்களை நீக்கவும்)**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன்.அவர் ....................................திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை வைத்தார் என்பதையும் உறுதிபடுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துகின்ற அதிகாரியின் முழுப் பெயர் :
கையொப்பம் :
பதவி மற்றும் உத்தியோக முத்திரை :

(இச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர் , சட்டத்தரணி , பகிரங்க முப்படையின் அதிகார தரத்திலுள்ள அதிகாரியொருவர் , பொலிஸ் சேவையில் வர்தமானியில் பிரகரிக்கப்பட்ட பதவியொன்றில் உள்ள ரூ.240,360/- இற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளமொன்றை பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் உள்ள அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.)

## அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்கள தலைவர் சான்றிதழ்

திரு./திருமதி./செல்வி./ ........................................... தற்போது ..................... அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் நிரந்தர ஓய்வூதியமுள்ள பதவியொன்றில் சேவையில் உள்ளார் என்பதனையும் , அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும் , ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்படவில்லை என்பதனையும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என்பதனையும் உறுதிபடுத்துகின்றேன்.இப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கேற்ப நிறுவனமொன்றுக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கலாம் என்பதனையும் பரிந்துரைக்கின்றேன்.

திகதி ...............................................

...............................................

திணைக்களத் தலைவர் கையொப்பம்
(உத்தியோக முத்திரையை வைக்கவும்)